பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

22 10 2025 WEDNESDAY 6.30 PM

<u>வணக்கம் - மாநிலச் செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

- வங்கக்கடலில் உருவான ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி வலுவடையாமல் நீடிப்பதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.
- மழை பாதிப்புகளை தடுப்பதற்கு தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.
- டெல்டா மாவட்ட விவசாயிகளின் பிரச்சினைக்கு தீர்வு காண திமுக அரசு தவறிவிட்டதாக பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.
- சென்னை, கிண்டி ரேஸ் கிளப்பிடமிருந்து கைப்பற்றப்பட்ட நிலத்தில் மழைநீர் சேகரிப்பதற்கான குளங்களை அமைக்கும் திட்டத்தை செயல்படுத்த சென்னை உயர்நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.
- எகிப்து சர்வதேச ஜூனியர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Ishita Negi பட்டம் வென்றார்.

>>>>><<<<<

வங்கக்கடலில் உருவான ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி வலுவடையாமல் நீடிப்பதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட் – செந்தாமரைக்கண்ணன் (1) 24 செகண்ட்ஸ்)

திருவள்ளூர் மற்றும் ராணிப்பேட்டை மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் அடுத்த 24 மணி நேரத்தில் அதிகனமழை பெய்யக்கூடும் என்றும் அவர் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் – செந்தாமரைக்கண்ணன் (2) 57 செகண்ட்ஸ்)

வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்துள்ளதன் காரணமாக மாநிலம் முழுவதும் பரவலாக மழை பெய்து வருகிறது.

திருவள்ளூர் மாவட்டத்தில் மழை பாதிப்புகளை கண்காணிப்பதற்கென 64 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதாக ஆட்சியர் திரு. பிரதாப் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் – பிரதாப் 55 செகண்ட்ஸ்)

தருமபுரி மாவட்டத்தில் பெய்து வரும் மழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - தண்டபாணி 37 செகண்ட்ஸ்)

இதேபோல் செங்கல்பட்டு மாவட்டத்திலும் பரவலாக மழை பெய்து வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - சுரேகா 45 செகண்ட்ஸ்)

செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து உபரி நீர் படிப்படியாக திறந்துவிடப்படுவதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் கூறியுள்ளார்.

சென்னை, கோட்டூர்புரம் பகுதியில் மழையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மதிய உணவு வழங்கிய பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

அரசு மருத்துவமனைகளில் மழைக்கால நோய்களுக்கு தேவையான மருந்துகள் போதிய அளவில் கையிருப்பில் உள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

(சவுண்ட்பைட் – மா.சுப்பிரமணியன் 48 செகண்ட்ஸ்)

பள்ளி வளாகங்களில் தேங்கியுள்ள மழைநீரை உடனடியாக அகற்ற தலைமையாசிரியர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி கூறியுள்ளார்.

மதுரையில் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர், பள்ளிகளில் மின்கசிவு ஏற்படுகிறதா என்பது குறித்து ஆய்வு செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

>>>>><<<<<

மக்கள் நலனில் அக்கறையின்றி திமுக அரசு செயல்பட்டு வருவதாக பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

இன்று கோவையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், டெல்டா மாவட்ட விவசாயிகளின் பிரச்சினைக்கு தீர்வு காண திமுக அரசு தவறிவிட்டதாக கூறினார்.

நெல் கொள்முதலுக்கு கூட கமிஷன் கேட்கப்படுவதாக அவர் குற்றம் சாட்டினார்.

திமுக அரசுக்கு எதிரான மனநிலையே மக்களிடம் உள்ளதாகவும் திரு. நயினார் நாகேந்திரன் தெரிவித்தார்.

>>>>><<<<<

டெல்டா மாவட்டங்களில் பெய்த மழை காரணமாக பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய நிவாரணத்தை திமுக அரசு வழங்க வேண்டும் என்று தேமுதிக பொதுச்செயலாளர் திருமதி. பிரேமலதா விஜயகாந்த் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், மழை வெள்ளத்தால் பாதிக்கப்படும் மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றி, அவர்களுக்கு உரிய உதவிகளை மாநில அரசு வழங்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>>><<<<<

சென்னை, கிண்டி ரேஸ் கிளப்பிடமிருந்து கைப்பற்றப்பட்ட நிலத்தில் மழைநீர் சேகரிப்பதற்கான குளங்களை அமைக்கும் திட்டத்தை செயல்படுத்த சென்னை உயர்நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.

இதுதொடர்பான மேல்முறையீட்டு மனுவினை விசாரணை செய்த நீதிபதிகள் திரு. எஸ்.எம். சுப்பிரமணியம், திரு. முஹமது ஷஃபிக் அமர்வு இன்று இதற்கான உத்தரவை பிறப்பித்தது.

சம்பந்தப்பட்ட இடத்தில் திட்டங்களை மேற்கொள்வதற்கு தடை விதித்து தனி நீதிபதி பிறப்பித்த இடைக்கால உத்தரவு ரத்து செய்யப்படுவதாகவும் அந்த உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>><<<<<

மாவட்டச் செய்திகள்

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழியில் வடகிழக்கு பருவமழை முன்னேற்பாடுகள் குறித்து, கண்காணிப்பு அலுவலர் திருமதி. கவிதா ராமு தலைமையில் அதிகாரிகள் பங்கேற்ற கலந்தாய்வுக் கூட்டம் இன்று நடைபெற்றது.

>>>>><<<<<

உலக தமிழ்ச் சங்கம் சார்பில் மேடைப்பேச்சு ஆளுமைத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி இன்று மதுரையில் தொடங்கியது.

>>>>><<<<<

விளையாட்டுச் செய்திகள்

எகிப்து சர்வதேச ஜூனியர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Ishita Negi பட்டம் வென்றார்.

19 வயதுக்குட்பட்டோருக்கான மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் அவர் 21-14, 21-17 என்ற செட்கணக்கில் இந்தியாவின் Radha Gadgil-ஐ வென்றார்.

>>>>><<<<<

ஆசிய இளையோர் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் Jagsher Singh Khangurra காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

சீனாவின் Chengdu-வில் நடைபெற்று வரும் இப்போட்டியின், ஆடவர் 17 வயதுக்குட்பட்டோருக்கான இரண்டாவது சுற்று ஆட்டத்தில் அவர், சீனாவின் Yufeng-ஐ வென்றார்.

மகளிர் ஒற்றையர் பிரிவில் Shaina Manimuthu, Lakshya Rajesh, Deeksha Sudhakar ஆகியோரும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளனர்.

>>>>><<<<<

ஆசிய Rugby Seven போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

Prashant Singh தலைமையிலான இந்த அணியில் 13 பேர் இடம்பெற்றுள்ளனர்.

இப்போட்டி, மஸ்கட்டில் வரும் 25ஆம் தேதி தொடங்குகிறது.

>>>>>END<<<<<